www.Padasalai.Net www.CBSEtips.in

V7T

விருதுநகர் மாவட்டம்
இரண்டாம் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2023

வகுப்பு 7

காலம்: 1.30 மணி

தமிழ்

மதிப்பெண்கள்: 30

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **5×1=5**

1) தொல்காப்பியம் கடற்பயணத்தை ………… வழக்கம் என்று கூறுகிறது.
அ) நன்னீர் ஆ) தண்ணீர் இ) முந்நீர் ஈ) கண்ணீர்

2) நன்னூலின்படி தமிழிலுள்ள ஓரெழுத்து ஒருமொழிகளின் எண்ணிக்கை …………
அ) 40 ஆ) 42 இ) 44 ஈ) 46

3) 'ஏடெடுத்தேன்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
அ) ஏடெடு+தேன் ஆ) ஏட்டு+எடுத்தேன்
இ) ஏடு+எடுத்தேன் ஈ) ஏ+டெடுத்தேன்

4) கல்வியைப் போல் ………… செல்வம் வேறில்லை.
அ) விலையில்லாத ஆ) கேடில்லாத
இ) உயர்வில்லாத ஈ) தவறில்லாத

5) 'பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்' என்று பாடியவர் …………
அ) கம்பர் ஆ) திருவள்ளுவர் இ) பாரதியார் ஈ) பாரதிதாசன்

**II. குறுவினா: (ஏதேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளி)** **3×2=6**

6) நாவாயின் தோற்றம் எவ்வாறு இருந்ததாக அகநானூறு கூறுகிறது?
7) கப்பலின் உறுப்புகள் சிலவற்றின் பெயர்களைக் கூறுக.
8) இயற்சொல்லின் நான்கு வகைகள் யாவை?
9) கல்விச்செல்வத்தின் இயல்புகளாக நாலடியார் கூறும் செய்திகளை எழுதுக.
10) கல்வி அறிவு இல்லாதவர்கள் பற்றி வள்ளுவர் கூறுவது யாது?

**III. சிறுவினா: (ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி)** **1×4=4**

11) பண்டைத் தமிழரின் கப்பல் செலுத்தும் முறை பற்றி எழுதுக.
12) கல்வியே அழியாத செல்வம் என்பதை விளக்குக.

**IV. மனப்பாடப்பகுதி:** **1×4=4**

13) 'வானம்' எனத் தொடங்கும் 'கலங்கரை விளக்கம்' பாடலை அடிபிறழாமல் எழுதுக.

**V. எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளி:** **3×2=6**

14) **கலைச்சொல் எழுதுக:**
அ) Light house - ஆ) Moral -

15) **பொருத்தமான காலம் அமையுமாறு திருத்தி எழுதுக:**
அ) ஆசிரியர் நாளை சிறுதேர்வு நடத்தினார்.
ஆ) அமுதன் நேற்று வீட்டுக்கு வருவான்.

16) **ஓர் எழுத்து சொற்களால் நிரப்புக:**
அ) ………… சுடும்
ஆ) ………… பறக்கும்

17) **சரியான சொல்லைக் கொண்டு நிரப்புக:**
(நாம், உன், நீ)
அ) ………… என்ன செய்து கொண்டிருக்கிறாய்?
ஆ) ………… பெயர் என்ன?

**VI. விடையளி:** **1×5=5**

18) அ) உங்கள் பகுதியில் நூலகம் ஒன்று அமைத்துத் தரவேண்டி நூலக ஆணையருக்குக் கடிதம் எழுதுக. **(அல்லது)**
ஆ) 'ஆழ்கடலின் அடியில்' கதையைச் சுருக்கி எழுதுக.

-----------

Kindly send me your study materials to padasalai.net@gmail.com